தலைப்பு 247 – இலங்கை சுங்கம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 247 – இலங்கை சுங்கத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை சுங்கத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மைகள் தொடர்பில் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு,கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இலங்கை சுங்கத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இலங்கை சுங்கம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைதயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான உறுதிப்படுத்தலொன்றல்ல. தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமான பெறுவனவு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட நேரடி வங்கியிலிடல்களை உரிய வருமான குறியீகளை திட்டவட்டமாக இனங்காண முடியாததால் வருமானத்தை இனங்காணும் வரை தற்காலிகமாக அறிக்கையிட்டு வைப்பதற்கு பயன்படுத்திய வருமான கட்டுப்பாட்டுக் கணக்கில் ஆண்டிறுதித் திகதியிலான வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 18,785,730,933 மற்றும் ரூபா 7,772,069,824 தொகைகளை சரியாக இனங்காணாது காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலாக இனங்காணப்பட்டிருந்தது. அப்பெறுமதியை ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் திட்டவட்டமான வருமான குறியீட்டின் கீழ் இனங்காணாது பல்வேறு பெறுவனவு மற்றும் பல்வேறு கொடுப்பனவாக காண்பிக்கப்பட்டிருந்தன.	கணக்காய்வு ஐயவினாவில் வருமான கட்டுப்பாட்டுக் கணக்காக காட்டியுள்ளது சுங்க நிதி கட்டுப்பாட்டுக் கணக்காகும். அந்த கட்டுப்பாட்டு கணக்கில் ஆண்டிறுதி வரவு மற்றும் செலவு மீதிகளினால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் உருவான காசுப்பாய்ச்சல்கள் பிரதிபலிக்கின்றன. அதனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	வங்கி வைப்புக்களை இனங்காண திட்டவட்டமான முறைமை ஒன்றை அமைக்க வேண்டியதுடன் ஆண்டினுள் இடம்பெற்றுள்ள அனைத்து வங்கி வைப்புகளையும் பகுப்பாய்வு செய்து வருமானம் மற்றும் செலவுகளை இனங்கண்ட பின்னர் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும்.
(ii)	ஏசீஏ 1 (i) இல் காட்டப்பட்டிருந்த சுங்க திணைக்களத்திற்குரிய நிலுவை வருமானத்தின் பிரகாரம் இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு பெறவேண்டிய அல்லது செலுத்த வேண்டிய மீதி இல்லாதிருந்த போதும், பெட்ரோலிய கூட்டுத்தாபன கணக்கின் பிரகாரம் சுங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 32,072,136,585 மற்றும் சுங்கத்திலிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 1,239,333,736	சுங்க திணைக்களத்திற்குரிய நிலுவை வருமானம் தொடர்பான விபரம் ஏசீஏ 1 (i) படிவத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	சுங்க திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானம், நிலுவை வருமானம் மற்றும் ஆண்டிற்குரிய வருமானங்களை சரியாக இனங்காண முடியுமானவாறு கணக்கீடு செய்யும்

ஆகக் காட்டப்பட்டிருந்தது.		திட்டவட்ட முறைமையொன்றை அமைக்க வேண்டும்.

(ஆ) வருமானமல்லாத பெறுவனவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
விசாரணை முடிவடைந்துள்ள 184 சுங்க புலனாய்வுகளிற்குரிய பலதரப்பினரிற்கு விதிக்கப்பட்ட தண்டம் மற்றும் உரித்தற்றதாக்கல் (penalties and forfeitures) பெறுமதியான ரூபா 4,790,470,462 தொகை 2024 திசெம்பர் 31 திகதி வரையும் அறவிட்டிருக்காததால் சுங்க கட்டளைகள் சட்டத்தின் 153 (2) (அ) பிரிவின் பிரகாரம் அந்த தண்டம் மற்றும் உரித்தற்றதாகியதால் பொது திறைசேரிக்கு கிடைக்க வேண்டிய 30 சதவீத பெறுமதியான ரூபா 1,437,141,139 தொகையும் நிலுவையாக காணப்பட்டது.	விசாரணை முடிவடைந்துள்ள சுங்க புலனாய்வுகளிற்குரியதாக அறவிடவுள்ள தண்டம் மற்றும் உரித்தற்றதாக்கள்களை அறவிடுவதற்காக குறித்த தரப்பினரிற்கு எழுத்து மூலம் அறவித்துள்ளதுடன் அது தொடர்பாக பதில் வழங்காத நிறுவனம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	விசாரணை முடிவடைந்துள்ள சுங்க புலனாய்வுகளின் மூலம் விதிக்கப்பட்ட தண்டம் மற்றும் உரித்தற்றதாக்கள்கள் (penalties and forfeitures) பிரகாரம் அறவிட வேண்டிய பெறுமதி, தாமதமின்றி அறவிட துரிதமாக தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டியதுடன் கொடுப்பனவு இணக்கப்பாடற்ற மீதிகள் விடயத்தில் தாமதமின்றி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
உத்தியோகத்தர்கள் 10 பேர்களிற்குரியதாக முற்பண ‘‘பீ’’ கணக்கில் காட்டப்பட்ட கடன் மீதி மற்றும் அங்கத்தவர் கடன் பதிவேட்டில் (சீ.சீ.10 பதிவேடு) காட்ப்பட்ட கடன் மீதிகளிற்கிடையே ரூபா 426,574 ஆன இணக்கமின்மை காணப்பட்டதுடன் 26 உத்தியோகத்தர்களிற்குரியதாக முற்பண ‘‘பீ’’ கணக்கில் காட்டப்பட்ட கடன் மீதி ரூபா 3,762,258 ஆன கடன் மீதி அங்கத்தவர் கடன் பதிவேட்டில் (சீ.சீ.10 பதிவேடு) உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	உத்தியோகத்தர்கள் 10 பேர்களிற்குரியதாக முற்பண ‘‘பீ’’ கணக்கில் காட்டப்பட்ட மீதி மற்றும் அங்கத்தவர் கடன் பதிவேட்டின் பிரகாரம் (சீ.சீ.10 பதிவேடு) ரூபா 426,574 ஆன இணக்கமின்மை காட்டப்படுவதானது அங்கத்தவர் கடன் பதிவேட்டிற்கு பிரதியிடும் போது ஏற்பட்டுள்ள தவறுகளின் காரணத்தினாலாகும்.	முற்பண ‘‘பீ’’ கணக்கில் காட்டப்பட்ட கடன் மீதிகளுடன் அங்கத்தவர் கடன் பதிவேட்டில் காட்டப்படும் கடன் மீதிகள் இணங்கும் வகையில் முறையாக மற்றும் முழுமையான கணக்கீட்டுடன் கூடிய கடன் முறையொன்றை மற்றும் கட்டுப்பாட்டு முறையொன்றை அமைத்து பேணிச் செல்ல வேண்டும்.

(ஈ) கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்தும் முற்பணக் கணக்கு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சுங்கத்தின் பல்வேறு 13 பிரிவுகள் மூலம் மேற்கொள்ளப்படும் 216 புலனாய்வுகளிற்கு தேவையான செலவுகளை மேற்கொள்வதற்கு கைது செய்யப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட் பண்டங்கள் தொடர்பான முற்பணக் கணக்கிலிருந்து (கை.அ.ப. கணக்கு) 05 ஆண்டுகளிற்கு முன்னர் பெற்றிருந்த முற்பணம் ரூபா 6,462,337 இன் புலாய்வு தீர்ப்பு தாமதித்த காரணத்தால் மீளாய்வாண்டு இறுதி திகதியிலும் தீர்த்திருக்கவில்லை. பெற்றுக் கொண்ட முற்பணத்தை அந்த புலனாய்வு முடிவடைந்த பின்னர் விரைவில் தீர்க்க வேண்டிய போதும், 11 சந்தர்ப்பங்களிற்குரியதாக அந்த கணக்கிலிருந்து பெற்றுக் கொண்ட முற்பணம் ரூபா 1,122,171 புலனாய்வு முடிவடைந்திருந்த போதும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கை.அ.ப. கணக்கிலிருந்து பெற்றுக் கொண்ட முற்பணத்தை குறித்த புலனாய்வு முடிவடையும் வரை தீர்க்க முடியாது. மேலும், ஐயவினாவில் காண்பித்துள்ள பிரகாரம் 2024.12.31 திகதிக்கு குறிப்பிட்டுள்ள மீதி ரூபா 6,462,337 தொகை அல்லாது ரூபா 2,524,009.20 ஆகும் எதிர்காலத்தில் புலனாய்வு முடிவடைந்த பின்னர் முற்பணத்தை தீர்ப்பதற்குரிய உத்தியோதரிற்கு அறிவுரை வழங்கியுள்ளதென.	முற்பணம் வழங்குவதனை விஷேட சந்தர்ப்பங்களிற்கு மாத்திரம் மட்டுப்படுத்த மற்றும் புலனாய்வு முடிவடைந்த போதும் மீண்டும் முற்பணம் பெற்றுக் கொண்ட பணிகள் முடிவடைந்த உடனே முற்பணத்தை தீர்ப்பதற்குரிய நடைமுறைகளை அமைக்க வேண்டும்.

(உ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதிக்கு நிதியல்லாத சொத்துக்களிலான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 11,402,424,218 ஆக காட்டப்பட்ட போதும், திருகோணமலை மற்றும் யாழ்பாணத்தில் அமைந்துள்ள 05 காணித் துண்டுகள் மற்றும் அவற்றில் அமைந்துள்ள கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்காததால் அந்தப் பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது.	திருகோணமலை மற்றும் யாழ்பாணத்தில் அமைந்துள்ள 05 காணித் துண்டுகளை சுவீகரிக்க குறித்த பிரதேச செயலகங்கள் ஊடாக தற்போதே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சுவீகரிப்பு நடவடிகைக நிறைவடைந்த பின்னர் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது முடியுமான வரை நியாயமான பெறுமானங்களை உள்ளடக்க வேண்டியதால் சுங்கத்திற்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

(ஊ) கட்டுநிதி மீதி

கணக்காயெ்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஏசீஏ - 7 இல் காட்டிய கட்டுநிதி சீராக்க கூற்றில் ஏனைய தலைப்புகளிற்காக அறிக்கையிடும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய தலைப்புகளிற்காக அறிக்கையிடும் நிறுவனங்களினால் முற்பண ''பீ'' கணக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல் முறையே ரூபா 316,674,095 இனால் மற்றும் ரூபா 10,406,781 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	ஏசீஏ - 7 இன் பிரகாரம் ஏனைய தலைப்புகளிற்காக அறிக்கையிடும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளாக ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் குறிப்பிடப்படும் பெறுமதியான ரூபா 8,332,011,629/- குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய தலைப்புகளிற்காக அறிக்கையிடும் நிறுவனங்களினால் முற்பண ''பீ'' கணக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தலாக ரூபா 26,754,157/- தொகை ஏசீஏ – 7 படிவத்தில் காட்டியுள்ளதுடன் அது ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் சரியானதாகும.	நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமானங்கள் உள்ளடக்கப்படுவதாக உறுதி செய்யும் கணக்கு முறைமை ஒன்றை தயாரிக்க வேண்டும்.

(எ) காசுப் பாய்ச்சல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட ஏனைய பெறுவனவுகள் ரூபா 2,047,737 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாய்ச்சலாக கவனத்திற் கொண்டதால் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் அப் பெறுமதியால் தவறாக குறிப்பிடப்பட்டிருந்தது.	கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிக்காக செலவின தலைப்பினை பரிமாற்றம் செய்யும் போது 2103 செலவின தலைப்பின் நிதி விடயத்தை சரி செய்வதற்காக கணக்கீடு செய்யப்பட்டுள்ள ஜர்னல் குரிப்பு ஊடாக ரூபா 2,047,737 ஆன தொகை ஒன்றிணைந்த பரீட்சை மீதிக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. அதனால் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் உருவான தொகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமானங்கள் உள்ளடக்கப்படுவதாக உறுதி செய்யும் கணக்கு முறைமை ஒன்றை தயாரிக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தி தொடர்ப்பு	செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்தி தொடர்ப்பு
1.6.1 (ஆ) (iii)	2024 திசெம்பர் 31 திகதிக்கு நிதியல்லாத சொத்துக்களிலான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 11,402,424,218 ஆக காட்டப்பட்ட போதும், திருகோணமலை மற்றும் யாழ்பாணத்தில் அமைந்துள்ள 05 காணித் துண்டுகள் மற்றும் அவற்றில் அமைந்துள்ள கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்காததால் அந்தப் பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது.	1.6.1 (உ)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வருமானக் குறியீடு 4 இற்குரியதாக மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உண்மை வருமானத்திற்கிடையே 3 சதவீதம் முதல் 36 சதவீதம் வரையான வீச்சளவில் குறை முரண்கள் மற்றும் வருமானக் குறியீடு 7 இற்குரியதாக 21 சதவீதம் முதல் 447 வரையான அதி முரண்கள் ஏற்பட்டிருந்தது.	சுங்க திணைக்களத்தின் வருமானம் அந்த ஆண்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அளவின் மீது தீர்மானிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உண்மையான வருமானத்திற்கிடையே இவ்வாறான முரண்கள் ஏற்பாட முடியுமெனெ.	சரியான எதிர்வு கூறல்களுடன் கூடிய விவேகமான மதிப்பிபீட்டை தயாரிக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு வருமானத்தை முன்னைய ஆண்டு வருமானத்துடன் ஒப்பிடுகையில் வருமான குறியீட்டிலக்கம் 3 அற்குரியதாக வருமானத்தின் கனிசமான அளவு குறைவு காணப்பட்டதுடன் அது 10 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சளவை கொண்டிருந்தது.	இந்த வருமான மதிப்பீடு வழங்கப்படும் இலக்காவதுடன் ஒரு சில பொருளாதார மாற்றங்கள் மீது அந்த இலக்குகளில் முரண்கள் ஏற்பட முடியும்.	வருமானத்தை வளர்த்துக் கொள்ளக் கூடிய முறைமைகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

(இ)	மொத்த வரி வருமானத்தின் 38 சதவீதமான ரூபா22,044,131,527 ஆன இறக்குமதி வரி அளவின் 0.007 சதவீத அளவான ரூபா 1,500,438 மாத்திரம் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருந்தது.	அவதானிப்புடன் இணங்குகிறேன்.	அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	மொத்த வரி வருமானத்தின் 26 சதவீதமான ரூபா 15,236,676,819 ஆன விஷேட வியாபார பண்ட வரியினால் பிரிதிநிதிப்படுத்திய போதும் கடந்த 4 ஆண்டு காலத்தினுள் அவற்றில் எந்தவித தொகையையும் அறவிட இயலுமாக இருக்கவில்லை.	அவதானிப்புடன் இணங்குகிறேன்.	அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	மொத்த நிலுவை வரி வருமானத்தின் 17 சதவீதமான ரூபா 9,943,802,984 ஆன துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி உள்ளடங்கியுள்ளதுடன் அவற்றில் 99.9 சதவீதமான ரூபா 9,945,317,734 தொகை 4 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் நிலுவை வருமானம் ஆனபோதும் அவற்றில் ரூபா 1,514,750 மாத்திரம் ஆண்டினுள் அறவிடப்பட்டு இருந்தது.	அவதானிப்புடன் இணங்குகிறேன்.	அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை வருமானமான ரூபா 58,478,974,134 ஆன மீதியை பகுப்பாய்வு செய்யும் போது ஆண்டினுள் அறவிட்டிருந்த மொத்த நிலுவை வருமானம் ரூபா 771,450,220 ஆனதில் நிலுவை வருமானம் அறவிடும் அளவு 1.32 சதவீதமான மிகவும் சிறிய சதவீதமொன்றானது.	அவதானிப்புடன் இணங்குகிறேன்.	அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	இலக்கம் 01/2015 மற்றும் 2015 ஜுலை 20 திகதிய அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கை பிரகாரம் சனாதிபதி அலுவலகமும் உள்ளடங்களாக 37 அரசின் பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் ரூபா 57,721,517,615 தொகை 2024 திசெம்பர் 31 திகதிக்கு சுங்கத்திற்கு அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் இந்த அனைத்து நிலுவை வரிகளும் 2020 ஆண்டிற்கு முன்னரிலிருந்து சுங்கத்திற்கு அறவிட வேண்டியதாக காணப்பட்ட மீதிகளாகும். நிதிப்பிரமானம் 113 பிரகாரம் அந்த வருமானத்தை தவிர்ப்பதற்காக சுங்க பணிப்பாளர் நாயகத்தினால 2024 நவம்பர் 07 திகதி நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை	கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்டுள்ள அறவிட முடியாத நிலுவை சுங்க வரி வருமானமான ரூபா 57,721,517,615/- ஆண்டு 2020 அல்லது அதற்கு முன்னரான நிதி ஆண்டுகளிற்காக அறிக்கையிடப்பட்டுள்ளன. இந்த நிதியை தீர்ப்பதானால் அந்த அந்த அரச நிறுவனங்களினால் தேசிய வரவு செலவு திணைக்களத்திடம் மேலதிக நிதி ஏற்பாட்டை கோர வேண்டும். அதன் பிரதிபலனாக அரச செலவுகள் அதிகரிக்கும்.	அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திட்டமிடல், திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கோரப்பட்டு இருந்தது.

3.2 செலவின முகாமைத்துவம்

3.2.1 மீண்டுவரும் செலவினம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீண்டுவரும் செலவு விடயங்கள் 13 இல் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக 6 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விகிதத்தில் நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது.	செலவு விடயம் 1101 மற்றும் 1505 இற்கான நிதிஏற்பாடு எஞ்சுவதற்கு காரணமாக உள்ளதுதானது மதிப்பிடப்பட்டவாறு செலவின தேவைப்பாடு ஏற்படாத காரணத்தினாலாகும். 1102 செலவு விடயத்திற்காக சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்தின் மூலம் குறித்த செலவுகள் செய்யப்பட்டுள்ளன. செலவு விடயம் 1401 இல் எதிர்வு கூறிய பிரகாரம் போக்குவரத்து சேவை வழங்க தேவைப்படாததன் மீது நிதிஏற்பாடு எஞ்சியுள்ளது. அரசினால் எதிர்பார்த்தவாறு கடன் வழங்கப்படாததால் 1506 செலவு விடயத்தில் நிதிஏற்பாடு எஞ்சியுள்ளது.	சரியான எதிர்வு கூறல்களுடன் விவேகமான மதிப்பிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.

3.2.2 மூலதன செலவினம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சரியான எதிர்வு கூறலொன்றை செய்து செலவின மதிப்பீட்டை தயாரிக்காத காரணத்தால் 04 மூலதன செலவு விடயங்களில் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக 25 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சளவில் எஞ்சியிருந்தது. இதனால் நிதிஏற்பாட்டை அத்தியவசிய பிரிவுகளிற்கு இந்த நிதிஏற்பாட்டை பயன்படுத்தும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது..	மென்பொருள் பராமரிப்பு திருத்தமாக கணக்கீடு செய்தமை 1304 செலவு விடயத்தில் நிதிஏற்பாடு எஞ்சுவதற்கு காரணமாகவுள்ளது.	சரியான எதிர்வு கூறல்களுடன் விவேகமான மதிப்பிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	1869 இன் 17ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டம் 84(அ)(3) பிரிவு	உற்பத்திக் குதமொன்றில் ஒன்று திரட்டும் வாகனங்களிற்காக உள்நாட்டு ரீதியில் 30 சதவீதத்திற்கு குறையாத பெறுமதி சேர்க்கப்படுமானால் கைத்தொழில் அமைச்சரின் பரிந்துரையின் மீது 70 சதவீத உற்பத்தி வரிச் சலுகை வழங்க முடியும். மீளாய்வாண்டினுள் அவ்வாறான 7 கம்பனிகளினால் கைத்தொழில் அமைச்சரின் பரிந்துரையின் மீது வழங்கும70 சதவீத உற்பத்தி வரிச் சலுகையை கோரியிருந்தன. எனினும் சுங்கத்தினால் சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் கிரயம் கணக்கிடல் மற்றும் அதற்குரிய 30 சதவீத உள்நாட்டு பெறுமானத்தை சேர்த்தல் சரியாக கவனத்திற் கொள்ளாது வரி சலுகையை வழங்க நடவக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2024 ஆண்டில் உற்பத்தி குதம் உரித்தான 7 உற்பத்தி கம்பனிகளினால் 538 மோடார் கார்கள் மற்றும் 53381 மோடார் சைக்கில்களை குதத்தில் ஒன்று திரட்டி உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு இருந்தது. கணக்காய்வின் போது மேற்கொண்ட கணக்கிடலின் பிரகாரம் அந்த வாகனங்களிற்காக அறவிட வேண்டிய உற்பத்தி வரி ரூபா 10,744,332,600 ஆக வேண்டிய போதும் சுங்கத்தினால் ரூபா 3,356,784,548 மாத்திரம் அறவிட்டிருந்த காரணத்தால் ரூபா 7,387,548,052 ஆன உற்பத்தி வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வுடன் இணங்குகிறேன். இது வரை சட்டமா அதிபரின் அறிவுரை கிடைக்கவில்லை.	சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் கைத்தொழில் அமைச்சரின் பரிந்துரைகளிற்கு இணங்க சரியாக உற்பத்தி வரியை கணக்கிட வேண்டும்.
(ii)	1969 இன் 17ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டம் 153(2)(ஆ) பிரிவு	வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதி தொகை பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சிரின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொண்டு பொருத்தமான முறைமையொன்றை தயாரிக்க வேண்டிய போதிலும், அதற்கு இணங்காதவாறு தயாரித்துள்ள 1988 சனவரி 28 ஆம் திகதிய இலக்கம் பீஎல் 118 கொண்ட திணைக்கள கட்டளை பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான 13 வருட காலத்தில்	ஒவ்வொறு ஆண்டும் வெகுமதி நிதியத்திலிருந்து வெகமதி தொகையை பகிர்ந்தளிக்க செலவின மதிப்பீடொன்றை தயாரித்து நிதி அமைச்சரின் தனிப்பட்ட அங்கீகாரத்தை பெற்று	சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் கைத்தொழில் அமைச்சரின் இணக்கப்பாட்டை பெற்று பொருத்தமான சட்டரீதியான முறைமை ஒன்றை தயாரிக்க வேண்டும்.

		வெகுமதி நிதியத்திலிருந்து உத்தியோகத்தர்களுக்கு ரூபா 25,244,792,239 ஆன மற்றும் உளவாளிகளிற்கு ரூபா 4,554,073,737 ஆன தொகை பகிர்ந்தளிக்கப்பட்டு இருந்தது.	குறித்த தொகை செலுத்தப்பட்டுளளது.	
(iii)	162 ஆம் பிரிவு	சுங்கத்தின் பொறுப்பிற்கு எடுத்த பின்னர் அழிவடையும் பொருள் வகைகள் கூடிய விரைவில் விற்பனை செய்யப்பட வேண்டியதுடன் 2024 திசெம்பர் 31 திகதி வரை பல காரணங்களிற்காக சுங்கத்தின் பல பிரிவுகளில் தடுத்து வைத்துள்ள 867 கொள்கலன்களினுள் காணப்படும் பொருட்கள், மனித பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமானவாறு தொடர்புடைய பிரிவின் பிரகாரம் வெளியனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எடுத்து பராதீனத்திற்காக மத்திய பராதீன பிரிவிற்கு அனுப்பியுள்ள கொள்கலன்களின் எண்ணிக்கை 2024 திசெம்பர் 31 திகதி வரை சுமார் 252 அளவாகும். அவற்றில் 75 கொள்கலன்களை டெண்டர் மூலம் விற்பனை செய்ய சமர்ப்பித்துள்ளதுடன் இன்னும் 28 இனை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. 149 கொள்கலன் அளவு தொடர்பாக மாத்திரம் அழிக்கும் செயன்முறையை மத்திய பராதீன பிரிவின் மூலம் செய்யப்பட்டு வருகின்றது.	அழிவடையும் பொருட்கள் தொடர்பான சுங்க நிவாரண செயன்முறையை துரிதப்படுத்தும் மற்றும் அந்த செயன்முறையின் பின்னர் மேற்படி பொருட்களை அகற்றி சரியான முறைமையொன்றை தயாரிக்க வேண்டும்.
(iv)	தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத்தின் 4:6 உப பிரிவு	மரணித்த உத்தியோகத்தரிடமிருந்து அரசிற்கு அறவிட வேண்டிய கடன் மீதிகளை அவர்களினது வாரிசுகளிற்கு செலுத்தவுள்ள எந்தவித தொகையிலிருந்தும் கழித்துக்கொள்ள வேண்டியதுடன் பிணையாளர்களிடமிருந்து மற்றும் உரிமையாளர்களிடமிருந்து அறவிட முடியாவிடின் தாமதமின்றி சட்ட மா அதிபரின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரையான காலம் கடந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வெண்டிய ரூபா 119,700 ஆன மீதியொன்று, 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலம் கடந்த 2 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட	மரணித்த 9 உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,262,438 ஆன கடன் மீதிக்குரியதான விளக்கமளித்தல் இலக்கம் 02 இணைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டள்ளது.	தாபன விதிக் கோவை ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		வேண்டிய ரூபா 96,990 ஆன மீதியொன்று மற்றும் 5 ஆண்டுகள் வரையான காலம் கடந்த 6 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,045,748 மீதியொன்றாக மரணித்த 9 உத்தியோகத்தரிடமிருந்து மீளாய்வாண்டு இறுதி திகதியில் அறவிட வேண்டிய ரூபா 1,262,438 ஆன கடன் மீதி தொடர்பாக மேற்குறித்த எற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.		
(v)	நி.பி 102 மற்றும் 110	வெளிநாட்டு தனியார் நிறுவனம் ஒன்றினால் ஒரு கப்பலிலிருந்து இன்கொரு கப்பலிற்கு பொருட்களை பரிமாற்றும் முறையின் கீழ் (Transshipment) சிங்கப்பூரில் கப்பலில் ஏற்றப்பட்ட சிகரெட் இருப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுங்க புலனாய்வின் விளைவாக சிகரெட் தொகை அரசுடமையாக்கப்பட்ட பின்னர் ரூபா 5,901,750 இற்கு ஏலத்தில் விற்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அரசுடமைப்படுத்தியதற்கு எதிராக இற்ககுமதியாளரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்வில் சுங்கம் குற்றவாளியாக்கப்பட்டு ரூபா 69,451,809 இழப்பீட்டை இறக்குமதியாளரிற்கு செலுத்த நேரிட்டிருந்தது. இந்த தவறான முடிவிற்கு பொறுப்பான 2025உத்தியோகத்தரிற்கு எதிராக 2023 மே 11 திகதி ஆரம்ப விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டு இருந்ததுடன் அதன் அறிக்கையை இரண்டு மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2025 ஏப்ரல் 20 திகதி வரை மேற்படி அறிக்கையை சமர்ப்பித்த தவறான முடிவிற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஆரம்ப விசாரணை குழுவினால் இறுதி அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் இது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.	தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் ஆரம்ப விசாரணையை விரைவில் நிறைவு செய்து ஒழுங்கான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அரசிற்கு அறிவிட வேண்டிய நட்டத்தை குறித்த உத்தியோகத்தரிடம் இருந்து மிகை அறவீடு செய்ய வேண்டும்.
(vi)	நி.பி 570/571	வைப்புச் செய்த திகதியிலிருந்து 02 ஆண்டுகளினுள் உரிமை கோராத அனைத்து வைப்புக்களையும், காலாவதியான வைப்பாக கருதி நி.பி. 571(3) பந்தி ஏற்பாட்டின் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதி வரை 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 13,620,000 ஆன டென்டர் வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைத்தல் செய்யப்படுவதானது இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த பின்னர் அடுத்த ஆண்டிலாகும். 2024 ஆண்டில் அரச வருமானத்திற்கு செலுவு	நிதிப் பிரமாணக் கோவை ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

			வைக்கப்பட்டது 2021 ஆண்டில் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களாகும். அதன் பிரகாரம் 2022 ஆண்டில் இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக்களை அரச வருமானத்திற்கு அனுப்புதல் 2025 ஆண்டில் மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும் கணக்காய்வினால் அறிவித்துள்ள பிரகாரம் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்காக குறித்துக் கொண்டேன்.	
(vii)	2024.01.24 திகதி நடந்த அரச கணக்குகள் மீதான செயற்குழு பரிந்துரை மற்றும் 2017 ஏப்ரல் 19 திகதிய இலக்கம் 3/2017 கொண்ட சுற்றறிக்கை	அனைத்து அரச ஊழியர்களும் தமது வரவு மற்றும் வெளிச்செல்லளை பதிவதற்கு விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்த வேண்டிய போதும், இலங்கை சுங்க உத்தியோகத்தர்கள் 2335 பேர்களிற்கு சம்பளம், ஊதியம், மேலதிக நேரம், விடுமுறை நாட் சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு படிகளாக ரூபா 2,308,694,777 மற்றும் சுங்க மேலதிக நேர கப்பல் பொருட்களை பரீட்சிப்பு கட்டணம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொலைதொடர்பு நிதியம் மூலம் மேலதிக நேரம் ரூபா 1,087,172,344 ஆக கூட்டுத் தொகை ரூபா 3,395,867,121 தொகை விரல் அடையாள இயந்திரம் மூலம் வரவினை உறுதி செய்து கொள்ளாது 2024 ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு வரவு மற்றும் வெளிச் செல்லலை தொடர்பான சரியாக உறுதி செய்தலின்றி இந்த ஊழியர்களிற்காக ஒரு நாளைக்கு 24 மணித்தியாலங்கள் வரை மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தது.	சுங்க திணைக்கள உத்தியோகத்தர்களின் சேவை தன்மையின் பிரகாரம் வரவு மற்றும் வெளிச் செல்லலிற்காக விரல் அடையாள இயந்திரததை பயன்படுத்துவது நடைமுறை சாத்தியமற்றதாக அவதானிக்கிறேன். அதன் காரணமாக, உத்தியோகத்தர்களின் வரவு மற்றும் வெளிச் செல்லலை பதிவதற்காக சுங்க திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளிலும் பதிவிநிலை உத்தியோகத்தர்களின் கிட்டிய மேற்பார்வையின் கீழ் பொது 18 படிவத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடுகிறேன்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளை கடைபிடிக்க வேண்டும்.

3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(i) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	வெள்ளை சீனியாக வெளிப்படுத்தி சிவப்பு சீனி இறக்குமதி செய்ததால் தண்டத்திற்கு உள்ளான இறக்குமதியாளர் ஒருவருக்கு சுங்கத்தினால் ரூபா 500,000 ஆன தண்டப்பணத்தை மற்றும் ரூபா 189,293,778 ஆன உரித்தற்றதாக்கல் விதித்திருந்ததுடன் இறக்குமதியாளர் அந்த தண்டத்திற்கு இணங்கியதன் மீது அரசுடமையாக்ககாது ரூபா 190,000,000 ஆன வங்கி பிணை ஒன்றின் மீது பண்ட இருப்பை சுங்க பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டிருந்தது. இறக்குமதியாளரினால் அந்த தண்டம் தொடர்பாக அமைச்சரிற்கு முறையீடொன்றை சமர்ப்பித்திருந்ததுடன் அமைச்சரினால் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டிரந்தது. எவ்வாறாயினும் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தின் ரூபா 30 மில்லியனை குறைக்க அமைச்சர் தீர்மானித்தாக வணிக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் பின்னர் சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ள போதும் அமைச்சர் வழங்கிய அவ்வாறான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த தளர்வினால் அரசிற்கு ஏற்பட்டிருந்த மொத்த அரச வருமான இழப்பு ரூபா 62,505,801 ஆனதுடன் இந்த இறக்குமதியாளர் இதற்கு முன்னர் 23 சந்தர்ப்பங்களில் தண்டத்திற்கு உட்பட்டிருந்தார்.	தடை செய்யப்பட்ட அளவு ரூபா 189,293,778/- இலிருந்து ரூபா 160,000,000/- வரை குறைத்தல் கௌரவ நிதி அமைச்சிரினால் எடுக்கப்பட்ட சட்ட ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஒனரென அவதானிக்கப்பட்டது. வணிக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் மற்றும் நிதி பொருளாதா உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கௌ்ளகைகள் அமைச்சின் கடிதத் தலைப்புடன் கூடிய வணிக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பிய நிதி அமைச்சரின் பணிப்பின் மீதான அறிவித்தலை ஏற்று சுங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.	தண்டம் ஒன்றை தளர்த்தும் போது சுங்க கட்டளைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென.
(ii)	ஆபரணங்களை இறக்குமதி மற்றும் விற்பனை செய்யும் பிரசித்த கம்பனியொன்றினால் ரூபா 753,210,479 9 பெறுமதியான தங்க ஆபரணங்கள் வெளிநாட்டவர்களினால் அழைப்பித்துக் கொண்டு இறக்குமதி வரியை புறக்கணித்தமை தொடர்பாக இலக்கம் PCAD/2024/00043/CCR/00171 இன் கீழ் சுங்க புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த கம்பனியினால் சுங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா 219,817,086 ஆனதுடன் சுங்க கட்டளை சட்டத்தின் 107 மற்றும் 129 பிரிவு பிரகாரம் இந்த பொருட்களை அரசுடமையாக்கி மற்றும் பொருட்களின் பெறுமதியை போன்று மூன்று மடங்கு தடையொன்றை செய்ய முடியுமான போதும், புலனாய்வு முடிவில் ரூபா 2,919,082,695 ஆன தடையொன்றின் பிரகாரம் பின்னர் அதனை ரூபா 190,000,000 வரை தளர்த்தியிருந்தது. இந்த தளர்த்தலின் காரணமாக செலுத்த	கோவை கிடைத்தவுடனே பதில் சமர்ப்பிக்கப்படும்.	சுங்க கட்டளை சட்டத்திற்கு இணங்க அறவிட வேண்டிய வரித் தொகைக்கு குறையாத தண்டமொன்றை விதிப்பதன் மூலம் சட்டவிரோத செயற்பாடுகளிற்கு செல்வதனை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வேண்டியிருந்த வரித் தொகையை விட ரூபா 29,817,086 குறைவாக செலுத்தி பொருட்களை விடுவித்துக் கொள்ள இறக்குமதியாளரிற்கு இயலுமாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேவையற்ற வருமானக் கசிவை (Revenue Leakages) தவிர்க்கும் ஒரு மூலோபாயமாக 2024 ஆண்டிற்கான வரவு செலவு முன்மொழிவின் மூலம் ''சுங்கத்தினுள் அபாய முகாமைத்துவ மென்பொருள் தொகுதியொன்றை அமைத்தல்'' இற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள போதும் ஆண்டிறுதி வரை மனுதாரர்களை தெரிவு செய்வதனை தவிர அதற்குரிய பணிகளை மேற்கொண்டிருக்கவில்லை.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடும் விடயங்களுடன் இணங்குகிறேன். முதலாவது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு கூட்டத்தை நடாத்தி அறிக்கை 2024 மார்ச் 31 தயாரித்துள்ளதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு புறம்பாக இரண்டு அங்கத்தவர்களை நியமிக்க முன்மொழியப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட காலம் 02 மாதங்களாகும். அதன் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு கடிதம் மூலம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு பொறுத்தமான நபரொருவரை பெயரிடுமாறு 2024 மே 31 திகதி அறிவித்து பதில் கிடைக்காததால் 2024 ஜுலை 31 திகதி வேறு நபரொருவரை தெரிவு செய்ய அறிவுரை கோரி குறிப்பொன்று கோவையில் உட்படுத்தப்பட்டது.	பாதீட்டின் மூலம் ஒதுக்கியுள்ள நிதிஏற்பாட்டை குறித்த ஆண்டில் பயன்படுத்தி உத்தேச பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	பொருட்களின் விலையை குறை மதிப்பீடு செய்து (Under Value) பொருட்களை இறக்குமதி செய்து அதுபற்றி வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் உரியவாறு செலுத்த வேண்டிய எஞ்சிய வரித் தொகையை அரச இணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படுமென பணிப்பாளர் நாயகத்தினால் 2024 மே 09 திகதி நடைபெற்ற அரச கணக்குகள் மீதான செயற்குழுவில் குறிப்பிட்டுள்ள போதும், குறை மதிப்பீடு செய்த சந்தர்ப்பங்களையும் சுங்க புலனாய்வாக்கி தண்டம் விதித்து அதில் 50 சதவீதம் வெகுமதியாக உத்தியோகத்தர்கள் பெற்றிருந்தனர். சுங்க புலனாய்வுகளின் பின்னர் ''பண்ட குறை மதிப்பீடு'' செய்துள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட 1858 சந்தர்ப்பங்களில் புலனாய்வின்	இங்கை சுங்கம், பொருட்களின் பெறுமதியை மதிப்பிடும் போது சுங்க கட்டளை சட்டத்தின் ''E'' அட்டவனை பிரகாரம் மற்றும் 52 ஆம் பிரிவிற்கு இணங்க இரண்டு விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	கணக்குகள் மீதான செயற்குழுவில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் பொருட்களின் விலையை குறை மதிப்பீடு செய்து (Under Value) பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சரியாக செலுத்த வேண்டிய எஞ்சிய வரித் தொகையை அறவிட வேண்டும்.

	பின்னர் உரித்தற்றதாக்கல் மற்றும் தண்டம் விதித்து அதில் 30 சதவீதம் மாத்திரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.		

4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விற்பனை செய்ய முடியாத பொருட்களை அழிக்கும் பணியின் பொறுப்பை உடைய மத்திய பராதீன பிரிவிற்கு பொருட்களை அழிப்பதற்காக 128 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதும், அவற்றில் 33 கோரிக்கைகளிற்கு உரியதாக மாத்திரம் பொருட்களை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். இதற்காக பிரிவில் நிலவிலய உத்தியோகத்தர் பற்றாக்குறையும் தாக்கம் செலுத்தியுள்ளது. தற்போது குறித்த பராதீன செயன்முறையை துரிதப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	விற்பனை செய்ய முடியாத பொருட்களை அழிக்கும் பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	இஸ்தாபித்தல், உரிமை மற்றும் செயற்படுத்துதல் (Build Own & Operate-BOO) ஆகிய பெறுகைகள் நடைமுறையின் கீழ் ரூபீஸ் ஸ்கேனிங் சிஸ்டம் லிமிடட் எனும் கம்பனியிடம் சுங்கம் தனது கொள்கலன் ஸ்கேனிங் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் 2021 ஆண்டில் அந்த கம்பனிக்கு 21,590,008 அமெ.டொ செலுத்தி தொகுதியின் முழு உரிமையை சுங்கத்திற்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இங்கு சுங்க அனுமதி செய்முறைக்காக முழுமையான எக்ஸ் கதிர் ஸ்கேனிங் எதிர்பார்க்கப்பட்ட போதும் அது செயற்படாததால் அறிவிக்கப்பட்ட பொருள் உருப்படிகளிற்கு இடையே மறைத்து வைத்துள்ள உருப்படிகளை இனங்காணல், போலியான பொருட்களை அறிவித்தல் எண்ணிக்கையை குறைத்தல், தடை செய்தல் மற்றும் சட்டவிரோத பொருட்களின் இறக்குமதியை குறைத்தல் ஆகிய எதிர்பார்த்த திட்டத்தை அடைந்து கொள்ள முடியவில்லை.	இந்த தொகுதியில் காணப்படும் தொழில்நுட்ப பிரச்சனையை கண்டறிய அந்த கம்பனி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் நடாத்தியுள்ளதுடன் அது தொடர்பாக தேவையான முன்மொழிவுகளை மற்றும் பரிந்துரைகளை பெற்றுக் கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதென.	சுங்க தவறுகளை இனங்காணல் மற்றும் தடுத்தலிற்காக நவீன தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்த வேண்டும்.

4.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சுங்கத்தினால் கைப்பற்றிய பொருட்களை பராதீனம் செய்யும் ஒரு முறைமையாக டெண்டர் முறையை பயன்படுத்திய போதும்,	2024 திசெம்பர் மாதத்தில் நீண்ட காலமாக விற்பனை ஆகாது எஞ்சியிருந்த பொருட்களை மீண்டும்	சுங்க பராதீனம் தொடர்பாக வரிவான

பல தடவைகள் டென்டர் விற்பனைக்கு சமர்ப்பித்த போதும் உரிய விலைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் கிரே லயின் I, கிரே லயின் II மற்றும் ஏசியன் கொள்கலன் முனையத்தில் மாத்திரம் முறையே பயன்படுத்திய உடைகள், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் மெட்டைகளுடன் கூடிய 55 கொள்கலன்கள் விற்பனை செய்ய முடியாது தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	பரீட்சித்து குறித்த பொருட்களிற்கு தற்கால நிலைமையை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் மதிப்பீடு செய்ய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அதன் மூலம் நீண்ட காலமாக விற்பனையாகது இருந்த பொருடகள் பாரிய அளவினை விற்பனை செய்ய முடியுமாக இருந்தது.	விளம்பரமொன்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சுங்கத்திற்கு சொந்தமாக கார், வேன், கெப் போன்ற 06 வகையான 110 வாகனங்கள் காணப்பட்ட போதும் அவற்றில் 25 வாகனங்கள் ஓட்ட நிலையில் இருக்கவில்லை. அவற்றில் சில வாகனங்கள் 29 மாத காலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. 2025 மார்ச் 20 திகதி கணக்காய்வினால் மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் பிரகாரம் 20 வாகனங்கள் எந்தவித காப்பும் இன்றி துறைமுக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் வழங்கல மற்றும் சேவை பிரிவினால் மேற்கொண்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம் அந்த வாகனங்கள் 14 நாட்கள் முதல் 12 வருடங்ள் வரையான காலமொன்று அந்த இடத்தில் பயன்பாடின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் பெறுபாலான வாகன எண்ணிக்கை திருத்த வேண்டிய நிலையில் காணப்பட்ட போதும், அதற்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்றிருக்கவில்லை.	இது தொடர்பாக பரீட்சித்துப் பார்த்து தேவையான நடவக்கைகள் மேற்கொள்ளப்படும்.	சொத்துக்களை உச்ச ஆக்கபூர்வமாக மற்றும் வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும்.

4.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிவாரண பணிக்களின் போது வங்கி பிணையின் மீது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் விடுவிக்கப்பட்ட 27 சந்தர்ப்பங்களில் பிணை செல்லுபடியாகும் காலத்தினுள் விசாரணையை முடிவிக்க அல்லது விசாரணை காலத்தை மற்றும் சமகாலத்தில் வங்கி பிணையின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்துக் கொள்ளாத காரணத்தால் அவ்வாறு ரூபா 100,172,482 ஆன வங்கி பிணை மீது விடுவித்த பொருட்கள் தொடர்பாக அற்விட	மேற்குறித்த வங்கி பிணைகளின் காலாவதியாதல் மற்றும் ஏனைய உரிய தகவல்களை உட்படுத்த இந்த திணைக்களத்தின் ASYCUDA தொகுதி மூலம் தயாரிக்கப்பட்ட நிகழ்சித் திட்டத்தை பயன்படுத்தியதுடன், அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் முன்னர் காணப்பட்ட Reminder Option இந்த கணக்காய்வு ஐயவினாவின் மூலம் பரிந்துரைத்த காலஎல்லையினுள் செயலிழந்து	காலாவதியான மற்றும் போலி வங்கி பிணையை இனங்காண உரிய முறைமையை இஸ்தாபிக்க வேண்டும்.

வேண்டிய தண்டம் மற்றும் உரித்தற்றதாக்கல் அறவிடுவது சவாலாக இருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் மேற்படி விசாரணை ஆரம்பிக்கப்பட்டு ஆண்டு 1 ½ முதல் 12 ஆண்டுகள் வரையான காலம் கடந்துள்ள போதும் விசாரணையை முடிவுறுத்த அல்லது விசாரணையை முடிவுறுத்தும் வரை வங்கி பிணையை செல்லுபடியாக வைத்துக் கொள்ளாத உத்தியோகத்தரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காணப்பட்டதாக பின்னர் அறியக் கிடைத்ததாகவும், அது பற்றி அறிந்து கொண்டவுடனே திணைக்களத்தின் தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்ப பிரிவிற்கு அறிவித்ததாகவும், குறிப்பிடுகிறேன்.	

4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுங்கத்தினால் நீண்ட காலமாக தடுத்து வைத்துள்ள கொள்கலன்களிற்கு இடையே வாகன உதிரிப்பாகங்களுடன் கூடிய 60 கொள்கலன்கள், பிலாஸ்டிக் பொருட்களுடன் கூடிய 57 கொள்கலன்கள், தளபாடங்கள் மற்றும் மரப்பலகைகளுடன் கூடிய 36 கொள்கலன்கள், உணவுப் பொருட்கள் 301 கொள்கலன்கள், சிகரட் மற்றும் சிகரட்டுடன் கூடியவை உள்ளிட்ட 24 கொள்கலன்கள், பாக்கு 34 கொள்கலன்கள் மற்றும் பல்வேறு கலப்பு உருப்படிகளுடன் கூடிய 49 கொள்கலன்களும் ஆனது. உணவுப் பொருட்களுடன் கூடிய கொள்கலன்களிற்கு இடையே செத்தல் மிளகாய் உள்ளடங்கும் 20 கொள்கலன்கள், உருளை கிழங்கு 11 கொள்கலன்கள், 9 பாண்மா உற்பத்தி, அரிச 107 கொள்கலன்கள் மற்றும் தேயிலை 54 கொள்கலன்களும் ஆனதுடன், விரைவில் அழிவடையும் பொருட்கள் தொடர்பாக துரித நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சுங்க திணைக்களத்தினால் 2025 ஆண்டிற்காக அறிமுகம் செய்துள்ள 120 நாட்கள் துரித பராதீன செயன் முறையின் கீழ் நீண்ட காலமாக தடுத்து வைத்துள்ள கொள்கலன்களின் விற்பனை செய்ய முடியுமான பொருட்களை விற்பனை செய்யவும் அழக்க முடியுமான பொருட்களை அழக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.	தடுத்தது வைத்துள்ள கொள்கலன்கள் தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மாதாந்தம் ரூபா 4,650,000 வாடகை தொகையை செலுத்தி சுங்கத்தினால் மட்டக்குளிய பிரதேசத்தில் தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெற்றிருந்த காணியொன்றில் கைப்பற்றப்பட்ட 332 வாகனங்கள் மற்றும் ருஹுனு மாகம்புர துறைமுக வளவில் 108 வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் பெறும்பாலான எண்ணிக்கையான வாகனங்கள் நீண்ட காலமாக வாகனசாலைகளில் நிறுத்தி வைத்திருந்த காரணத்தால் துருப்பிடித்து ஓட்டத்திற்கு	இந்த வாகனங்களிற்கு இடையே ஒருசில வாகனங்களிற்காக சுங்க புலனாய்வு தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை, நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை, துறைமுக கட்டணம் செலுத்தத் தாமதம் போன்ற காரணங்களால் விடுவித்தல் தாமதமாகியுள்ளது. மேலும்	கைப்பற்றப்பட்ட வாகனங்களை சுங்க சட்டத்தின் பிரகாரம் விரைவில் பராதீனம் செய்ய வேண்டும்.

பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டது. எவ்வாறாயினும், சுங்க கட்டளை சட்டத்தின் 109 பிரிவின் பிரகாரம் 30 நாட்களிற்கு அதிக காலம் சுங்க வளவில் விட்டு வைக்கும் பொருட்களை பகிரங்க அறிவித்தலின் பின்னர் ஏலத்தில் அல்லது டென்டர் மூலம் விற்பனை செய்ய முடியுமாக இருக்கும் போது இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் மட்டக்குளிய பிரதேச தனியார் கம்பனிக்கு மாத்திரம் ஆண்டினுள் ரூபா 55,800,000 ஆன வாடகை செலுத்தப்பட்டிருந்தது.	சுங்க கட்டளை சட்டத்தின் 109 பிரிவின் கீழ் அரச நடவடிக்கைகளுக்காக விடுவிப்பதற்காகவுள்ள 11 வாகனங்களிற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையை வினவியுள்ளதுடன், அதன் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	

4.7 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஒருமுகப்படுத்தப்பட்ட சம்பவ பதிவேட்டின் (Central Case Register) பிரகாரம் 2015 முதல் 2024 வரை 37,685 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றின் 28,166 சம்பவங்கள் தீர்த்து முடிவுறுத்தி மற்றும் 9,519 சம்பவங்கள் மேலும் தீர்ப்பதற்கு எஞ்சியிருந்தன. அதற்கு ஒரு வருடத்திற்குள் பதிவு செய்யப்பட்ட 1,523 சம்பவங்கள், 1 ஆண்டிலும் அதிக 5 ஆண்டிலும் குறைந்த 4,958 சம்பவங்கள் மற்றும் 5 ஆண்டிலும் அதிக 3,038 சம்பவங்கள் அதற்கு உள்ளடங்குகின்றன.	புலனாய்வுகளை தீர்ப்பதற்கு காலம் கடந்தமைக்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன.	புலனாய்வுகளை விரைவல் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வெண்டும்..
(ஆ)	Sea Trans தீர்வையற்ற கடைத் தொகுதியிலிருந்து சட்டவிரோ 45 சிகரட் காட்டுன்கள் (ஒரு காடுனில் 200 சிகரட்கள் உள்ளன) எடுத்து செல்வது தொடர்பாக பிரதான சுங்க பரிசோதகர் மற்றும் சுங்க ஒழுங்குபடுத்தும் உத்தியோகத்தரிற்கு உரியதாக மேற்கொண்ட ஆரம்ப விசாரணை அறிக்கை பிரகாரம் அவர்கள் இருவருக்கும் குற்றப் பத்திரம் ஒப்படைத்து ஒருவருடம் கடந்திருந்தது. எவ்வாறாயினும், சுங்க பணிப்பாளர் (நிவாரணம்) இனால் குற்றம்சாட்டப்பட்ட சுங்க ஒழுங்குபடுத்துனரற்கு முறையாக அந்த குற்றப்பத்திரத்தை ஒப்படைக்கவில்லை என பின்னர் வெளிப்படுத்தப்பட்டதுடன் தாபன விதிக்கோவையின் முதலாம் அட்டவணையின் அரச உத்தியோகத்தரினால் மேற்கொள்ள முடியுமான தவறுகளில் 15 பிரிவிற்கு உட்படும் “தாபன விதிக்கோவை ஏற்பாடுகளை மீறுதல் அல்லது	கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகிறேன். கொழும்பு துறைமுக வளவில் அமைந்துள்ள பீ.ட்ரான்ஸ் தீர்வை வரியற்ற கடைத் தொகுதியிலிருந்து சட்டவிரோத சிகரட்டுகளை வெளியிட்டது தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணையின் குற்றவாளியாக இருந்த திரு. எச்.எஸ்.விஜிதவீர அவரிற்கு 2025.01.30 திகதிய ஒழுக்காற்று கட்டளை வழங்கி முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுளளன. மேற்குறித்த சம்பவததுடன் தொடர்பான மற்றைய குற்றவாளியான தரு. டீ.எம்.ஏ.எஸ்.ஹேரத் அவர்களின் ஒழுக்காறு விசாரணை தனிநபர் தீர்ப்பு	உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒழுக்காற்று செயற்பாடுகளை பக்கசார்பின்றி தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

	வேண்டுமென்றே அல்லது அவதானமின்றி அல்லது கவனயீனமாக அல்லது தவிர்க்கும் விதமான நடவடிக்கை எடுத்தல்'' வகையில் கவனத்திற் கொண்டு மேற்குறித்த சுங்க பணிப்பாளர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2020.10.19 திகதி ஒப்படைக்கப்பட்ட குற்றப் பத்திரத்தின் பிரகாரம் மேற்குறித்த இரண்டு சுங்க உத்தியோகத்தர்களும் தாபன விதிக்கோவையின் II பாகத்தின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ள முடியுமான தவறுகள் தொடர்பான ''முதலாம் அட்டவணை'' இன் கீழான தவறினை செய்திருந்தாலும், அது '' இரண்டாம் அட்டவணையிலான தவறு'' ஆக தவறாக வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. விநியோகிக்கப்பட்ட குற்றப்பத்திரத்தின் குறைபாடுகளை இனங்கண்டதன் பின்னர் 2023.11.29 திகதி திருத்திய குற்றப் பத்திரத்தை இந்த இரண்டு உத்தியோகத்தரிற்கும் வழங்கி முறையான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதற்காக தனிநபர் தீர்ப்பு சபையொன்றை நியமித்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதிவரையும் விசாரணை முடிவடைந்திருக்கவில்லை.	சபையாக செயற்படும் திரு. எச்.எல்.திசேரா அவர்களினால் தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதாக அறிக்கையிடுகிறேன். முறையான ஒழுக்காற்று விசாரணை தொடர்பாக விசாரணை தீர்ப்பு சபைக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்புதல் மற்றும் தொலைபேசி அழைப்பின் மூலம் முன்னேற்றதை வினவுவதன் மூலம் விசாரணையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிக்கையிகடுகிறேன்.	
(இ)	சுங்க புலனாய்வு காரணமாக பல முனையங்களில் தடுத்து வைத்துள்ள நிலையங்களை இனங்காண முடியாத 80 கொள்கலன்கள், தடுத்து வைத்தமைக்கான காரணத்தை தெளிவுபடுத்த முடியாத 29 கொள்கலன்கள், தடுத்து வைத்த காலத்தை கண்டறிய முடியாத 08 கொள்கலன்கள் மற்றும் உள்ளடங்கும் பொருட்களை இனங்காணாத 61 கொள்கலன்கள விசாரணைகள் இன்றி தடுத்தது வைக்கப்பட்டிருந்தன.	இந்த கொள்கலன்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்குமாறு குறித்த பிரிவுகளிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தடுத்து வைத்துள்ள கொள்கலன்கள் தொடர்பான நாளாதுவரை ஆக்கப்பட்ட சரியான தகவல்கள் தொகுதி ஒன்றில் பேணிக் கொள்ள வேண்டும்.
(ஈ)	உதவி சுங்க அதிகாரி ஒருவரினால் 2020 ஆண்டில் மேற்கொண்ட நிதி மோசடி தொடர்பாக சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்திருந்ததுடன் குறித்த மோசடி தொடர்பாக திணைக்கள விசாரணையை நடாத்த நடவடிக்கை எடுக்காதது தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொண்ட வினவலின் பின்னர் ஆரம்ப விசாரணை குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. குறித்த	குறித்த தகவல்களை தற்போது அழைப்பித்துள்ளதுடன் அதன் பிரகாரம் இலக்கம் ESD/04/2022/02 கோவை மூலம் ஆரம்ப விசாரணையை துவங்கி தற்போது நடைபெற்று வருகின்றது. இந்த ஆரம்ப விசாரணையின் முறைப்பாட்டு தரப்பினரான திரு. எம்.எச்.இஸ்மி அவர்களிற்கு ஆரம்ப விசாரணைக்கு வாக்குமூலம் வழங்க வருகை தருமாறு 2025.02.05 மற்றும்	உத்தியோகத்தர்களின் மோசடி மற்றும் தவறுகள் தொடர்பாக மேலதிக கவனம் செலுத்த வேண்டும்.

	புலனாய்விற்காக முறைப்பாட்டாளர் சமுகமளித்திருக்காததுடன் விசாரணையை தனித் தரப்பாக நிறைவு செய்து தாபன விதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025.02.27 திகதிய கடிதம் மூலம் அறிவித்து அனுப்பிய போதும் அவர் அதற்காக வந்திருக்கவில்லை. புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.	
(உ)	பயணிகளை அழைத்துச் செல்லாத பொருட்கள் (Unaccompanied Passenger Cargo-UPB) பரீட்சிப்பு நிலையங்களில் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட பொருட்கள் பாரியளவில் குவிக்கப்பட்டுள்ளதால் அந்த நிலையங்களில் இடப்பாடு இல்லாதிருந்த போதும் தாமதமின்றி பயன்படுத்த முடியுமான பொருட்கள் விற்பனைக்கு /முடியாதனெல் பொருட்கள் பராதீனத்திற்கு நடடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்த விசாரணை நிலையங்களிலிருந்து விற்பனைக்காக மத்திய பராதீன பிரிவிற்கு அனுப்பியுள்ள பொருட்களை தாமதமின்றி டென்டரிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே குறித்த விசாரணை நிலையங்களிலிருந்து அழிப்பதற்காக மத்திய பராதீன பிரிவிற்கு அனுப்பியுள்ள பொருட்களை அழிக்கும் செயன்முறைக்கு உட்படுத்தியுள்ளதென.	அரசுடமையாக்கப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5 நல்லாளுகை

5.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பிரதான உள்ளக கணககாய்வாளருடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் சுமார் 12 முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளக கணக்காய்வு பிரிவிக்கு இணைக்கப்பட்டுள்ள போதும், பெரும்பாலான முகாமைத்துவ உதவியாளர்கள் ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் சுங்கத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு இடமாற்றப்படுவதால் உள்ளக கணக்காய்வு பிரிவின் பணிப்பொறுப்பை மேற்கொள்வதற்கு முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன் அதன் சுயாதீன தன்மை சவாழுக்கு உள்ளாகியிருந்தது.	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சுங்கத் திணைக்களத்தின் வரலாற்று வருமானம் இலக்குகள் நிரைவேற்றப்பட்டுள்ளது தற்போதைய இடமாற்ற முறையின் கீழாகும். சுங்கத் திணைக்களத்தின் சிறப்பான சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளும் போது நீண்ட காலமாக ஒரே இடத்தில் நிலைநிறுத்தப்படுவதும் ஒரு சிக்கலான சூழ்நிலையை உருவாக்கக்கப்படுவதால், தற்போதுள்ள முறைமையின் கீழ் தொடர்புடைய இடமாற்றக் கொள்கையைப் பேணிச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.	முறையான உள்ளக இடமாற்ற முறைமையொன்றை தயாரிக்க வேண்டும்.

5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும்	இந்த விடயங்கள் தொடர்பாக முறையாக பரீச்சித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்க	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின்

முகாமைத்துவக் குழுவினால் நிறுவனமொன்றில் நோக்கங்களை அடைந்துக்கொள்ளும் குறிக்கோள்களுடன் வளங்களை சிக்கனமாக மற்றும் செயற்திறனாக் பயன்படுத்துவதாக மீளாய்வு செய்ய வேண்டிய போதும், நிதி அமைச்சின் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக கழந்துரையாடளுக்கு உட்பட்ட மேற்குறிப்பிப்ட்ட நோக்கங்களுக்கு நேரடியாக பங்களிக்கும் விடயங்கள் மேலும் தீர்க்கப்படாது நிலவியதமையினால் இந்தக் குழுக்களை நடாத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமான விளைவுகளை அடைந்துக்கொள்ள முடியாமலிருந்தது.	குறிப்பிட்டுள்ளேன்.	பரிந்துரைகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

6 மனித வளங்கள் மகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
திணைக்களத்தில் பல்வேறு சேவைகளைச் சேர்ந்த பெரும்பாலான உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு முறை வெவ்வேறு பிரிவுகள்/அலகுகள்/கிளைகளுக்கு இடையில் இடமாற்றம் செய்த காரணத்தால் பல்வேறு வியங்களிற்குரிய கடமைகளை தொடர்ச்சியாக அனுபவமற்ற உத்தியோகத்தர்களால் செய்ய வேண்டியுள்ளமை, கடிதக்கோவை முறையாக ஒப்படைக்காதமை, ஆவணங்கள் காணாமல்போதல் மற்றும் கடிதக்கோவைகள் நாளாதுவரையாக்காமை காரணங்களால் கிளைகளில் உள்ளக கட்டுப்பாடுகளை முறையாக மேற்கொள்ளவும் பொறுப்பு மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்ய முடியவில்லை.	சுங்கத் திணைக்களத்தின் சிறப்பான நிலைமைகளைக் கருத்தில் கொள்ளும் போது ஒரே இடத்தில் நீண்ட காலம் தடுத்து வைப்பது சிக்கலான நிலையை ஏற்படுத்த முடியுமாவதால் தற்போதுள்ள இடமாற்ற முறைமையை செயற்படுத்தியுள்ளதுடன் எதிர்காலத்தில் ஏற்படும் தேவைகளின் பிரகாரம் பொருத்தமான திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்டும்.	முறையான உள்ளக இடமாற்ற முறைமையொன்றை தயாரிக்க வேண்டும்.